மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நடந்த விவாதத்திலும், நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதத்தின்போது நடந்த கூட்டத்தொடரிலும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய செயல்பாடு பற்றி நல்ல பாராட்டுதலைச் சொல்லி நல்ல ஆலோசனைகளையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த விவாதத்திலும் பேசவிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் துறையினுடைய முன்னேற்றத்திற்கு, இந்தத் துறையினுடைய செயல்பாட்டிற்கு நல்ல ஆலோசனைகளை அவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் தங்களுடைய கருத்துகளை, நல்ல ஆலோசனைகளைச் சொல்லியதற்குப் பிறகு, நான் பதில் அளிக்கிறபோது நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, இந்தத் துறையிலே எடுத்த நடவடிக்கைகள் பற்றியும், தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வருகிற திட்டங்களைப் பற்றியும், எதிர்காலத்திலே செயல்படுத்த இருக்கிற திட்டங்களைப் பற்றியும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு இந்தத் துறையின் சார்பிலே அறிவிக்கச் சொல்லியிருக்கிற புதிய அறிவிப்புகளைப் பற்றியும் இங்கே விளக்கமாக எடுத்து வைக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையின் மீது விவாதம், திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம். 11 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆளுக்கு 10 மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

7. இலங்கை சென்று திரும்பிய உறுப்பினர் திரு. லா. சந்தானம் அவர்களுக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் வெளிநாடு சென்று தாயகம் திரும்பி இருக்கிறார்கள். ஆகவே வெற்றிகரமாக பயணத்தை முடித்து தாயகம் திரும்பிய அவர்களுக்கு இம்மாமன்றத்தின் சார்பிலே என்னுடைய பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய வாழ்த்துகளோடு பேரவையின் வாழ்த்துகளையும் இணைத்துக்கொள்ளுகிறேன். ஒரு நல்ல பிள்ளைக்கு அடையாளமே சொல்லாமல் கொள்ளாமல் போவது என்று சொல்லாமல் போய்விட்டு வந்துவிட்டார்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடத்திலே தெரிவித்துக்கொண்டுதான், ஸ்ரீலங்கா சென்று வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றேன். மேலும் நான் அமைச்சர்களிடத்திலே எல்லாம்கூட சொல்லிவிட்டுச் சென்றேன். இன்றைய சூழ்நிலையிலே இலங்கைக்குச் சென்று அங்கே இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் பார்த்து வருகின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டதற்கு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அங்கே ஒரு நிறைவான சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு எனக்குப் பாராட்டு தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் ஸ்ரீலங்கா சென்று வந்து இருக்கிறார். அங்கே சென்று விடுதலைப் புலிகளினுடைய தலைவர் பிரபாகரனை சந்தித்தாரா? (சிரிப்பு) பேசினாரா? சமரசத்தை உருவாக்கினாரா? நல்ல சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. வேண்டாம், வேண்டாம்.

6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை எண் 18 - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய மானியக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.